**செ. கு. எண்: 149** **நாள் : 18.11.2015**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 18.11.2015

தமிழகத்தில் பெய்து வரும் வடகிழக்குப் பருவமழையின் காரணமாக 15.11.2015 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், காட்டேரி கிராமத்தைச் சேர்ந்த திரு விஜயரங்கன் என்பவரின் மகன் திருமலை;

சென்னை மாவட்டம், பெரம்பூர் வட்டம், பி.வி காலனியைச் சேர்ந்த திரு முகமது காசிம் என்பவரின் மகன் காதர் மொய்தீன்;

16.11.2015 அன்று வேலூர் மாவட்டம், ஆம்பூர் வட்டத்தைச் சேர்ந்த திரு ராமலிங்கம் என்பவரின் மகன் சுகுமார்;

–– ஆகியோர் வெள்ளப் பெருக்கின் காரணமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் செய்தியையும்;

16.11.2015 அன்று வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், தேவஸ்தானம் கிராமத்தைச் சேர்ந்த திரு முனுசாமி என்பவரின் மகன் ராஜ்கண்னு;

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், சாலவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு ஆறுமுகம் என்பவரின் மகன் கெங்கன்;

விழுப்புரம் மாவட்டம் கொளத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு தம்புசாமி என்பவரின் மனைவி தாயார்;

–– ஆகியோர் மழையின் காரணமாக வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து உயிரிழந்தனர் செய்தியையும்;

16.11.2015 அன்று சென்னை மாவட்டம், அமைந்தகரையைச் சேர்ந்த திரு சீனிவாசன் என்பவரின் மகன் நடராஜன்;

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புத்தூர் வட்டம், நந்திமேடு கிராமத்தைச் சேர்ந்த திரு பத்திரி என்பவரின் மகன் யுவராஜ்

–– ஆகியோர் மழையின் காரணமாக மின் கசிவு ஏற்பட்டு, மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர் செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழகத்தில் சமீபத்தில் பெய்த கன மழையின் காரணமாக பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த மேலும், இந்த **8** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**